களும், தனிப்பட்ட சங்கங்களும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித் தார்கள். அதனால் அதை கைவிடவேண்டிய நிலை இருக்கிறது. இப்போது கோவில்களில் கட்டப்படும் கடைகளை வெளியே கட்ட ஏற்பாடு செய்து வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 41 (3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"பேரவையின் விதி 41(3)-ஐ தளர்த்தி, இரண்டுக்கு மேற் பட்ட தீர்மானங்களை இன்று எடுத்துக் கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

4. கவன ஈர்ப்பு

(அ) மணலி எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து

MR. DEPUTY SPEAKER : The hon. Member Thiru N. Dennis will now call the attention of the Hon. Chief Minister to a matter of urgent public importance.

THIRU N. DENNIS : I now call the attention of the Hon. Chief Minister to a matter of urgent public importance, i.e., fire at Manali Project on 20th July 1972 and the serious loss involved therein.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 20-7-1972 அன்று இரவு 11-30 மணியளவில் மணலியில் உள்ள சென்னை, எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையில் தீ விபத்து ஒன்று எற்பட்டது. 25,000 டன் உயர்வகை மண்ணெண்ணெய் அடங்கிய 406-ஆம் எண் தொட்டியில் தீ பற்றியது.